கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

**OS.No. 88/2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேகர் | வா.சா | : 1 |
| த/க/பெயர் | : காளியண்ணன் | தேதி | : 06.04.2026 |

வா.சாட்சி –1 ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

1 முதல் 12 பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

**1.** என் மனைவிக்கு பவர் கொடுத்தது குறித்து வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் வில்லங்க சான்றிதழில் பவர் குறித்த விபரம் வராது. பவர் கொடுத்த விபரம் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் என் மனைவி கூறிய வகையில் தெரிந்து கொண்டேன். பவர் ரத்து செய்யப்பட்ட விபரத்தையும் என்னுடைய மனைவி என்னிடம் கூறினார் என்றால் கூறவில்லை. அதை கூறாமலேயே என்னுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரிதான். பவர் ரத்து செய்த விபரத்தை என்னுடைய மனைவிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பின் மூலம் அவர் தெரிந்து கொண்டார் என்றால் மூன்று மாதம் கழித்து அவர் தெரிந்து கொண்டார். என்னுடன் என் மனைவி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர் இரண்டு அல்லது மூன்று மாதம் கழித்து பவர் ரத்து செய்யப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்டார்.

2. பவர் ரத்து செய்த விபரம் குறித்து 1 முதல் 12 பிரதிவாதிகள் என்னுடைய மனைவிக்கு ஏற்கனவே அறிவிப்பு அனுப்பி இருக்கிறார்கள் என்றால் அது குறித்து என்னிடம் கூறவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 25.08.2021 ஆம் தேதி அன்று 13.07.2007 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தினை 13 ஆம் பிரதிவாதிக்கு எவ்வித அறிவிப்பும் தெரிவிக்காமல் ரத்து செய்து விட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ரத்து செய்த விபரத்தை எனக்கு கூறவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வில்லங்கம் போட்டு பார்த்த பின்னர் தான் எனக்கு பொது அதிகார பத்திரம் ரத்து செய்த விபரம் தெரியவந்தது. வில்லங்கம் எத்தனை வருடங்களுக்கு போட்டு பார்த்தேன் என்றால் அது தெரியவில்லை ஆவணத்தை பார்க்க வேண்டும்.

3. ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரே பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றாலும் ஏற்கனவே அசோக்குமார் என்பவருக்கு ஒப்பந்தம் போடப்பட்ட விபரம் தெரியும் என்றாலும் சரியல்ல. அந்த ஆவணத்தில் பி.வா.சா.ஆ. 1 ஆக நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் நான் சாட்சி கையொப்பம் செய்த விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. 24.08.2021 ஆம் தேதி அன்று காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து என்னையும் என் மனைவியையும் அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். 1 முதல் 12 பிரதிவாதிகள் அழைத்த புகாரின் பெயரில்தான் மேற்படி விசாரணைக்கு என்னையும் என் மனைவியையும் அழைத்து சென்றார்கள் என்றால் அது எனக்கு தெரியாது விசாரணைக்கு வருமாறு அழைத்ததால் நாங்கள் சென்றோம்.

4. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை காண்பித்து தான் என்னை விசாரணைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல நான் எந்த புகாரையும் பார்க்கவில்லை. நான் முன்னால் சென்று விட்டேன் என் மனைவி தனியாக அவருடைய தந்தையுடன் விசாரணைக்கு ஆஜரானார். எங்களை ஒன்றாக விசாரித்தார்கள் என்றால் தனித்தனியாக விசாரித்தார்கள் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை நாடுமாறு கூறிவிட்டார்கள். மேற்படி விசாரணையில் நான் அசோக்குமாரிடம் 5 லட்சம் கடனாக பெற்றேன் என்றாலும் என் மனைவியின் பெயரில் இருந்த பொது அதிகார பத்திரத்தை வைத்து அசோக்குமாரிடம் ஒப்பந்தம் ஏற்படுத்தி விட்டதாக கூறினேன் என்றால் நான் எதுவும் கூறவில்லை. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்திற்குரிய ரூபாய் 5 லட்சத்தை செலுத்தி விட்டு மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்துவிட்டு பிறகு பொது அதிகார பத்திரத்தையும் ரத்து செய்து கொடுப்பதாக கூறினோம் என்றால் சரியல்ல.

5. மேற்படி விசாரணைக்கு ஆஜராகி வந்த பின்னர் தான் இவ்வழக்கிற்குரிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் என்னுடைய மனைவிக்கு கொடுத்தேன் என்றால் அவ்வாறு எந்த அறிவிப்பும் நான் கொடுக்கவில்லை. இவ்வழக்கிற்க்கான அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி உள்ளேன். போலீஸ் விசாரணையில் என்ன வாக்குமூலம் அளித்தேன் என்றால் நான் எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை. நான்

விசாரணையில் உடன் இருந்ததால் அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும் என்றாலும் அதை தற்போது கூறினால் இவ்வழக்கிற்கு பாதகம் ஆகிவிடும் என்பதால் கூற மறுக்கிறேன் என்றால் சரியல்ல. 5 லட்சம் ரூபாய் வாங்கிய கடனை அசோக்குமாருக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியில்ல. அந்த கிரையை ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் இடும் பொழுது அசோக்குமாரும் என்னுடைய மனைவியும் எதற்காக அந்த ஒப்பந்தம் போடுவதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரியல்ல.

6. போலீஸ் விசாரணைக்கு வந்து சென்ற பின்னர்தான் மறுநாள் தான் கிரைய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதற்குப் பிறகு 1 முதல் 12 பிரதிவாதிகளிடம் பவர் பத்திரத்தை ரத்து செய்து தருவதாக கூறினார்கள் என்றால் சரியல்ல. விசாரணையில் உடன் இருந்து விட்டு அவ்வாறு கூறவில்லை என்று என்னுடைய மனைவிக்கு சாதகமாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவர் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விபரம் தெரியும் என்றாலும் முன் தேதியிட்டு ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் போதிய பணத்துடன் தயாராக இருந்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 4 ¼ லட்சம் ஏற்கனவே செலுத்தி விட்டேன் மீதி பத்திர செலவுக்காக தொகையை வைத்திருந்தது தான் குறிப்பிட்டுள்ளேன்.

7. கிரயத்தை பதிவு செய்வதற்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் டோக்கன் போட்டேனா என்றால் போட்டேன் சாட்சி மீண்டும் பத்திரம் தயாராகாத நிலையில் எவ்வாறு டோக்கன் போட இயலும் என்றும் டோக்கனை போடவில்லை என்றும் கூறுகிறார். முழுக்க கிரையை தொகையையும் கொடுத்து விட்டதாக நான் கூறுகின்ற நிலையில் ஏன் கிரைய பத்திரம் தயார் செய்யவில்லை என்றால் கிரையத்திற்கு அவர்கள் வரவில்லை அதனால் நான் கிரைய பத்திரம் தயார் செய்யவில்லை. சொந்த மனைவியிடம் முழுமையாக தொகையையும் கொடுத்துவிட்டு மூன்று வருடம் கால அவகாசம் போட்டேன் என்றால் அளப்பதற்காகவும் டிடிபி அப்ரூவல் பெறுவதற்காகவும் மேற்படி கால அவகாசம் குறிப்பிடப்பட்டது.

8. என்னுடைய மனைவிதான் சொத்தை அளப்பது மற்றும் டிடிசிபி அப்ரூவல்

பெற்றுக் கொடுப்பதாக கூறினார் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரம் பெற்று கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது என்றால் சரிதான் 2007 ஆம் வருடம் பொது அதிகார பத்திரம் பெறப்பட்டது 2021ல் தான் ஒப்பந்த பத்திரம் போட்டோம். பல வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் பவர் பத்திரத்தை ஏதாவது ரத்து செய்துள்ளீர்களா என்று 1 முதல் 12 பிரதிவாதிகளிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் அதற்கு அவர்கள் பவர் பத்திரத்தை ரத்து செய்யவில்லை என்று கூறினார்கள். 2016 ஆம் வருடம் 2018 ஆம் வருடம் மற்றும் 2021 ஆம் வருடம் ஆகிய வருடங்களில் கிரயம் செய்து கொடுக்குமாறு கேட்டேன் என்றால் ஆமாம். வழக்கிற்கான கிரைய ஒப்பந்த பத்திரம் 2021 ஆம் ஆண்டு தான் ஏற்படுத்தி உள்ளேன் என்றாலும் 2016 மற்றும் 2018 ஆம் வருடங்களில் கிரயம் செய்து கொடுக்குமாறு கேட்டதாக பதில் அளிப்பதில் இருந்து தாவா கிரைய ஒப்பந்த பத்திரமானது வழக்கிற்காக பொய்யாக ஏற்பட்டது என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் எனக்கு காடு உள்ளது என்றால் 1 ஏக்கர் காடு உள்ளது. மேற்படி ஏரியாவில் சொத்துக்கள் எவ்வளவு தொகைக்கு விற்கப்படுகிறது என்றால் அது எனக்கு தெரியாது. 2011 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை நான் மேற்படி தொகுதியில் பஞ்சாயத்து தலைவராக இருந்ததால் எனக்கு அந்த ஏரியாவில் சொத்துக்கள் எவ்வளவு விலைக்குப் போகும் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 25 மனைகளில் நான்கு மனைகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளது அதில் மனையில் பஞ்சாயத்து அலுவலகம் உள்ளது என்றால் சரியல்ல. சேவை மையம் உள்ளது. ஒரு மனை ராமசாமிக்கு விற்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. விற்கப்பட்ட மூன்று மனைகளும் சதுர அடி கணக்கில் விலை பேசப்பட்டு விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. 25.08.2021 ஆம் தேதி அன்று பவர் கேன்சல் பண்ண பட்டுவிட்டது என்றாலும் அதற்கு இரண்டு நாட்கள் கழித்து நான் மகேந்திரனின் வீட்டிற்கு சென்று எதற்காக பவர் கேன்சல் செய்து விட்டீர்கள் என்று கூறி விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல அவருடைய வீடு எங்கு உள்ளது என்று கூட எனக்கு தெரியாது. 1 முதல் 12 வரையிலான பிரதிவாதிகள் எனக்கு ஒரு பதில் அறிவிப்பு மற்றும் என்னுடைய மனைவிக்கு ஒரு பதில் அறிவிப்பும் அனுப்பி உள்ளார்கள் என்றால் சரிதான். இப்படி

பதில் அறிவிப்பு செப்டம்பர் மாதம் வந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எனக்கு வந்த பதில் அறிவிப்பா என்றால் ஆமாம். எட்டாவது மாதத்தில் ரத்து செய்துவிட்டு ஒன்பதாவது மாதத்தில் பதில் அறிவிப்பு அனுப்பி இருக்கிறார்கள். (**அந்த பதில் அறிவிப்பு பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

11. மேற்படி பதிலறிவிப்பு பெற்ற பின்னர் நேரடியாக கிரைய பத்திரங்கள் போட்டு இருக்கலாம் என்றாலும் எதற்காக கிரைய ஒப்பந்தம் போட்டீர்கள் என்றால் ஒப்பந்தம் முன்னரே போடப்பட்டு விட்டது கிரையத்திற்கு வராததால் தான் வழக்கு தாக்கல் செய்தேன். நானும் என்னுடைய மனைவியும் ஒன்றாக தான் வசித்து வருகிறோம். என்னுடைய மனைவி வந்திருப்பார் என்றாலும் தாவா கிரைய ஒப்பந்த பத்திரமே ஏற்படவில்லை என்றாலும் பொய்யாக கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி என்னுடைய வார்த்தையை மீற மாட்டார் என்றால் சரியல்ல வரவு–செலவு முதற்கொண்டு அவருடைய கணக்கு வழக்கு தனியானதாகும். போலியான ஒப்பந்தத்தின் பெயரில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/– G. ரூபனா,
கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.